சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. MCOP. 55/2013**

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம் நாள் திங்கட்கிழமை

மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **ம.சா.1-**இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வ.சிவக்குமார், எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஸ்ரீவித்யா | தொழில் | வேலை இல்லை |
| கணவர் பெயர் | லேட் பாக்கியராஜ் | ஜாதி | |
| கிராமம் | விண்ணமங்கலம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 37 |

**10.11.2025 முதல் விசாரணை**

நான் இம்மனுவின் மனுதாரர் ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானது தான். என் தரப்பு சான்றாவணங்களாக, முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேத பரிசோதனை அறிக்கை உண்மை நகல் **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இன்சியூரன்ஸ் பாலிசி உண்மை நகல் **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை உண்மை நகல் **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாகனத்தின் பதிவு சான்று உண்மை நகல் **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து பதிவேடு உண்மை நகல் **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஓட்டுநர் உரிமம் உண்மை நகல் **ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறப்பு சான்று நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) **ம.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாரிசு சான்று நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) **ம.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுவில் கோரியுள்ளவாறு உத்தரவாகும் படி கேட்டுக்கொள்கிறேன்.